தொண்டைமானாறு வெளிக்கள நிலையம் நடாத்தும்
மூன்றாம் தவணைப் பரீட்சை - 2022
Conducted by Field Work Centre, Thondaimanaru.
3rd Term Examination - 2022

| | | | | |
|---|---|---|---|---|
| தமிழ் Tamil | Three Hours / Gr -12 (2022) | 72 | T | I,II |

❖ பகுதி I இல் மூன்று வினாக்களுக்கும் பகுதி II இல் உள்ள இரு வினாக்களுக்குமாக ஐந்து வினாக்களுக்கு விடை எழுதுக.

## பகுதி I

*01.* அ) **பின்வரும் செய்யுளை வாசித்துக் கீழே தரப்பட்டுள்ள வினாக்களுக்கு விடை எழுதுக.**

விளையா டாயமொடு வெண்மண லழுத்தி
மறந்தனந் துறந்த காழ்குகை யகைய
நெய்பெய் தீம்பால் பெய்தினிது வளர்ப்ப
நும்மினுஞ் சிறந்தது நுவ்வை யாகுமென்
றன்னை கூறினாள் புன்னையது சிறப்பே
யம்ம நாணுது நும்மொடு நகையே
விருந்திற் பாணர் விளரிசை கடுப்ப
வலம்புரி வான்கோடு நரலுமிலங்கு நீர்த்
துறைகெழு கொண்க நீ நல்கி
னிறைபடு நீழல் பிறவுமா றுளவே.

1) இப்பாடலின் பொருளை உமது மொழிநடையில் எழுதுக.
2) இப்பாடலில் தோழியின் மதிநுட்பம் வெளிப்படுமாற்றை விளக்குக.
3) இச்செய்யுளில் இடம்பெற்றுள்ள உவமை அணியை இனங்கண்டு விளக்குக.

(4+3+3=10 புள்ளிகள்)

ஆ) தழுவின புளிஞர் வேந்தன் தாமரைச் செங்கணானை
எழுவினும் உயர்ந்த தோளாய் எய்தியது என்னை? என்ன
முழுது உலகு அளித்த தந்தை முந்தையோர் முறையினின்றும்
வழுவினன் அதனை நீக்க மன்னனைக் கொணர்வாய் என்றான்.

1) இச்செய்யுள் இடம்பெறும் சந்தர்ப்பத்தினை எழுதுக?
2) இச்செய்யுளில் இடம்பெறும் உவமை அணியினை இனங்கண்டு விளக்குக?
3) 'பரதன் அறநெறிப்பட்டவன்' என்பதற்கு இப்பாடலிலிருந்து ஆதாரத்தை முன்வைக்குக.

(3+3+4=10 புள்ளிகள்)

**02. ஒவ்வொரு கூற்றுக்கும் கீழே ஐந்து விடைகள் தரப்பட்டுள்ளன. அவற்றுள் மிகப்பொருத்தமான விடையைத் தெரிந்து அதன் இலக்கத்தை அடைப்புக்குறிக்குள் எழுதுக.**

1) வேற்றுநிலை மெய்ம் மயக்கமாக மட்டும் வரும் எழுத்துக்கள்.
1) க், ச் 2) த், ப் 3) ள், ழ் 4) ல், வ் 5) ழ், ர் ( )

2) ஏதோ செய்தி கொண்டு வருபவன் போல அவன் நடை இருந்தது. இவ்வாக்கியத்தில் "வருபவன்" என்பது.
1) எதிர்கால வினைமுற்று 2) படர்க்கைப்பெயர் 3) ஆக்கப்பெயர்
4) பயனிலை 5) வினையாலணையும் பெயர் ( )

3) ஓடினான் கண்ணன் என்பது
1) பெயரெச்சத்தொடர் 2) வினைமுற்றுத் தொடர் 3) வினையெச்சத் தொடர்
4) பெயர்ச் சொற்றொடர் 5) உரிச் சொற்றொடர் ( )

4) அவள் மரத்தால் இறங்கியதும், அவள் ஒரு கோப்பையில் மோர் கொண்டு வந்து கொடுத்தாள். இவ்வாக்கியத்தில் ஆல் உருபு தரும் வேற்றுமைப்பொருள்.
1) கருவி 2) உடனிகழ்ச்சி 3) நீங்கல்
4) காரணம் 5) கருத்தா ( )

5) பின்வருவனவற்றுள் குற்றியலுகரம் கெட்டுப்புணர்ந்த சொல்.
1) குருத்தோலை 2) எண்ணுப்பெயர் 3) பண்ணிசை
4) பட்டுச்சேலை 5) கடுக்காய் ( )

6) மேல்வாய்ப்பல் கீழ் உதட்டைப் பொருந்துவதால் பிறக்கும் இடையின எழுத்து.
1) ய் 2) ர் 3) ல் 4) வ் 5) ழ் ( )

7) பல குணம் தழுவிய உரிச்சொல்
1) கடி 2) சால 3) உறு 4) தவ 5) நனி ( )

8) கொரோனா வைரஸ் வேகமாகப் பரவுவதைக் கட்டுப்படுத்த சுகாதார விதிமுறைகளைப் பின்பற்றி நடக்கவேண்டும் என சுகாதார வைத்திய அதிகாரி கூறினார். இது எவ்வகை வாக்கியமாகும்.
1) தனிவாக்கியம் 2) கூட்டுவாக்கியம் 3) கலப்பு வாக்கியம்
4) தொடர் வாக்கியம் 5) கூற்று வாக்கியம்

9) பவளவாய் திறந்து அவள் கன்னல்மொழி பேசியதை என்னால் மறக்கமுடியாது. இங்கு வந்துள்ள தொகை.
1) வினைத்தொகை 2) வேற்றுமைத்தொகை 3) உவமைத்தொகை
4) உம்மைத்தொகை 5) அன்மொழித்தொகை ( )

10) கீழ்வருவனவற்றுள் ஒன்றன்பால் மற்றும் பலவின்பாலை உணர்த்தும் விகுதிகளாக முறையே அமைவன.
1) று, அ 2) அ, ஆ 3) வ, று 4) அ, வ 5) து, று ( )

(10 x 2 = 20 புள்ளிகள்)

**03. பின்வருவனவற்றுள் யாதேனும் ஒரு தலைப்பைத் தெரிந்து 300 – 350 சொற்களில் அமையுமாறு கட்டுரை எழுதுக.**

1) தமிழர் பண்பாட்டில் மறந்தவையும் நாம் இழந்தவையும்.
2) மதங்கள் போதிக்கும் மானிடம்
3) இலக்கியங்களில் இலட்சியப் பெண்கள்
4) இணையவழிக் கற்றலும் இன்றைய மாணவர் சவால்களும்
5) பேராசிரியர் க.கைலாசபதியின் தமிழ்ப் பணிகள்.

(20 புள்ளிகள்)

## பகுதி II

04. வலியறிதல் என்னும் அதிகாரத்தை ஆதாரமாகக் கொண்டு பின்வருவனவற்றிற்கு விடையளிக்குக.

அ) வலியின் பகுதிகளும் அதன் பயனும்
ஆ) தன் வலியறியாதவிடத்து ஏற்படும் இழுக்கு
இ) பொருள்வலி அறிதலின் சிறப்பு
ஈ) பிறிதுற மொழிதல் அணி கையாளப்பட்டுள்ள விதம் (4+4+8+4= 20 புள்ளிகள்)

05. ஒரு வெண்மணற் கிராமம் காத்துக் கொண்டிருக்கின்றது எனும் நாவலை அடிப்படையாகக் கொண்டு பின்வருவனவற்றிற்கு விடையளிக்குக.

அ) நாவலினூடாக வெளிப்படும் வாழ்வியல் அம்சங்கள்
ஆ) தாமோதரம் எனும் பாத்திரவார்ப்பும் பண்புகளும்
இ) கதாசிரியரின் மொழிநடைப்போக்கு (8+6+6= 20 புள்ளிகள்)

06. அ) பல்லவர் கால பக்தி சார் இலக்கியங்களை எழுதுக.
ஆ) பக்தி இலக்கியங்களின் பண்புகளைத் தெளிவுபடுத்துக.
இ) பல்லவர் கால சோழர்கால இலக்கியங்களுக்கிடையிலான ஒத்த பண்புகளை விளக்கி எழுதுக. (8+6+6= 20 புள்ளிகள்)

07. அ) ஈழத்திலக்கிய வரலாற்றிலே ஒல்லாந்தர் காலத்தில் பல்வகைப்பட்ட இலக்கியங்களின் தோற்றத்திற்கான பின்னணிகளைக் குறிப்பிடுக.
ஆ) இக்கால இலக்கியங்களின் பண்புகளை எழுதுக.
இ) உள்ளூர்ப் பிரபுத்துவத்தைப் பாடும் இலக்கியங்களைப் பற்றிக் கருத்துரைக்குக.

(6+8+6= 20 புள்ளிகள்)

08. பின்வருவனவற்றுள் எவையேனும் இரண்டினைப் பற்றி விளக்கி எழுதுக.

அ) தேர் எனும் சிறுகதையில் சித்திரிக்கப்பட்டுள்ள யாழ்ப்பாணத்துப் பண்பாட்டு அம்சங்கள்.
ஆ) தமிழர் நாகரிகத்தில் கிராமிய வாழ்க்கை எனும் கட்டுரையில் கிராமியச் சித்திரிப்பு
இ) கங்கை காண் படலத்தில் பரதனின் நிலை கண்ட குகனின் மனமாற்றம் வெளிப்படுத்தப் பட்டுள்ள விதம்.
ஈ) பாரதியாரின் குயிற்பாட்டில் காணப்படும் கவிதைச் சிறப்புக்கள்.

(2x10= 20 புள்ளிகள்)